1022

வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

மூன்றாம் தவணைப்பரீட்சை – 2017

| தரம் - 08 | சைவநெறி | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

❖ மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

1) தோப்புக்கரணம் போட்டு வழிபட வேண்டியவர்
   1) சிவபெருமான் 2) விநாயகர் 3) பராசக்தி 4) வைரவர்

2) மாசிமாத தேய்பிறைச் சதுர்த்தசியில் நோற்கப்படும் விரதம்
   1) நவராத்திரி 2) மாசிமகம் 3) மகாசிவராத்திரி 4) திருவாதிரை

3) சிவாலயத்தில் சிவதரிசன பலனைத் தருபவர்
   1) சண்டேஸ்வரர் 2) நடராஜர் 3) சோமாஸ்கந்தர் 4) தட்சணாமூர்த்தி

4) சாந்தோக்கிய உபநிடதம் கூறுவது
   1) கடவுளின் ஐந்தொழில் தத்துவம் 2) உயிர்கள் இறைவனை அடையும் முறை
   3) ஆன்மாவின் இயல்புகள் 4) கடவுளின் வியாபகத்தன்மை

5) தூலலிங்கம் என அழைக்கப்படுவது
   1) பலிபீடம் 2) சிவலிங்கம் 3) கோபுரம் 4) விமானம்

6) பிறந்தநாள் கொண்டாட்டத்தில் தவிர்க்க வேண்டிய ஒன்று
   1) முதியவர்கள், சிறுவர்களுடன் பிறந்தநாளைக் கொண்டாடுதல்
   2) ஆலயத்திற்குச் சென்று வழிபடுதல்.
   3) பெற்றோர் பெரியோரின் பாதங்களில் வீழ்ந்து வணங்குதல்
   4) தீபத்தை வாயால் ஊதி அணைத்தல்.

7) "மண்ணில் நல்லவண்ணம்......." தேவாரம் பாடப்பட்டதலம்.
   1) சிதம்பரம் 2) திருக்கழுமலம் 3) திருமருகல் 4) திருமறைக்காடு

8) சிவபெருமானுடைய திருமணத்தால் விசேடம் பெறுவது
   1) பங்குனி உத்தரம் 2) ஆனி உத்தரம் 3) வைகாசி விசாகம் 4) தைப்பூசம்



kalvi.lk

9) சுதர்சன சக்கரம் மூலஸ்தானத்தில் காணப்படும் விஷ்ணு ஆலயம்

1) பொன்னாலைவரதராஜப் பெருமாள் ஆலயம்

2) வல்லிபுர ஆழ்வார் ஆலயம்

3) வண்ணார்பண்ணை வெங்கடேசப் பெருமாள் ஆலயம்

4) மல்வில் கிருஷ்ணன் கோயில்

10) மூன்று குன்றுகளுடன் இயற்கை எழில் கொஞ்சும் வகையில் அமைந்த முருகன் ஆலயம்

1) கதிர்காம கந்தன் ஆலயம் 2) செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்

3) உகந்தை முருகன் ஆலயம் 4) மண்டூர் முருகன் ஆலயம்

11) முன்னேஸ்வர ஆலயத்தின் தலவிருட்சம்

1) ஆலமரம் 2) அரசமரம் 3) வன்னிமரம் 4) வில்வமரம்

12) யோக நெறியில் நின்று முத்தியடைந்த சமயகுரவர்

1) திருஞானசம்பந்தர் 2) மாணிக்கவாசகர் 3) திருநாவுக்கரசர் 4) சுந்தரமூர்த்தி நாயனார்

13) சங்கிதைகள், பிராமணங்கள் அடங்கும் காண்டம்

1) கர்மகாண்டம் 2) ஞானகாண்டம் 3) உபாசனாக் காண்டம் 4) யுத்த காண்டம்

14) பஞ்சபுராண ஒழுங்கு முறையில் ஐந்தாவதாகப் பாடப்படுவது

1) திருவாசகம் 2) திருவிசைப்பா 3) திருப்புராணம் 4) திருப்பல்லாண்டு

15) சதசத்து என அழைக்கப்படுவது

1) பசு 2) பாசம் 3) பதி 4) கன்மம்

16) சைவப்பெரியார் அ.சிவபாதசுந்தரனார் அவர்களால் இயற்றப்பட்ட நூல்

1) முதலாம் சைவ வினாவிடை 2) ஆத்திசூடி

3) சைவபோதம் முதற்புத்தகம் 4) பாலபாடம்

17) நிலம், நீர் தீ, காற்று, ஆகாயம் என்பன

1) பஞ்சாட்சரம் 2) பஞ்சபூதங்கள் 3) பஞ்சகௌவியங்கள் 4) பஞ்சநிலங்கள்

18) சிவபெருமானால் திருமாலுக்கு வழங்கப்பட்டது

1) வேற்படை 2) யூதகணங்கள் 3) சக்கரப்படை 3) அமரர்படை

19) தோத்திர நூலாகவும் சாத்திர நூலாகவும் போற்றப்படுவது

1) திருப்புகழ் 2) சகலகலாவல்லிமாலை 3) கந்தரனுபூதி 4) திருமந்திரம்

20) கண்ணப்ப நாயனாரிடம் காணப்பட்ட உயர்ந்த பண்பு

1) அன்பு 2) செய்ந்நன்றிமறவாமை 3) உண்மை 4) பொறுமை

(20X2=40புள்ளிகள்)


kalvi.lk

## பகுதி II

01. பின்வரும் திருமுறைப் பாடல்களில் இரண்டினை வரிக்கிரமமாக எழுதி பாடியவர் பெயர் தரம் என்பவற்றைத் தருக.

அ) "கற்றாங்கெரியோம்பி..............."

ஆ) "நீள நினைந்தடியேன்..............."

இ) "பாரொடு விண்ணாய்................"

ஈ) "மிண்டு மனத்தவர்......................"

உ) "இறவாத இன்ப அன்பு..............."

(5+ ½ + ½ X2=12 புள்ளிகள்)

02. "மனிதனை மனிதனாக வாழவைப்பன விழுமியங்கள்"

1) மனித வாழ்வை மேம்படுத்தும் விழுமியப் பண்புகள் நான்கு தருக.
2) மனக்கட்டுப்பாட்டுக்கான சாதனங்கள் மூன்று தருக.
3) எமக்குள்ள அடிப்படை உரிமைகள் மூன்று தருக.
4) முதியோரை கனம்பண்ணுவதற்கான உமது செயற்பாடுகள் யாவை?

(2+3+3+4=12 புள்ளிகள்)

Education கல்வி

03. "சைவப்பெரியார் அவர்களது வாழ்க்கை சமய வாழ்க்கையாகும்"

1) சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் தேர்ச்சிபெற்ற மொழிகள் யாவை?
2) சிவபாதசுந்தரனார் வசித்த பதவிகள் மூன்று தருக.
3) இவர் எழுதிய நூல்கள் மூன்று தருக.
4) இவர் ஆற்றிய பணிகள் நான்கு தருக.

(2+3+3+4=12 புள்ளிகள்)

04. "சைவத்தின் காவலர்கள் சமயகுரவர்கள்"

1) திருத்தொண்டர்களின் பெருமையை உலகறியச் செய்தவர் யார்? எவ்வாறு செய்தார்.
2) காரைகள் கூகைமுல்லை என்ற பதிகம் யாரால் எதற்காகப் பாடப்பட்டது.
3) மாணிக்கவாசகரை இறைவன் எவ்வாறு ஆட்கொண்டார்?
4) திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் இணைந்து ஆற்றிய மக்கள் பணி யாது? இதன் மூலம் நாம் உணரக்கூடிய உண்மை யாது?

(2+3+3+4=12 புள்ளிகள்)

**05. "கோபுரதரிசனம் கோடி புண்ணியம்"**

1) முறிகண்டிப் பிள்ளையாரின் சிறப்பு யாது?

2) முன்னேஸ்வர ஆலயத்தின் இறைவன், இறைவி, தீர்த்தம் பெயர்களை எழுதுக?

3) கண்ணகியம்மன் வழிபாட்டால் பெறும் நன்மைகள் மூன்று தருக.

4) உகந்தை முருகன் ஆலயம் எங்கே அமைந்துள்ளது. அதன் சிறப்புகள் மூன்று தருக.

(2+3+3+4=12 புள்ளிகள்)

06. "பதியினைப் போல் பசுபாசம் அநாதி"

1) முப்பொருள்கள் எனப்படுபவை யாவை.

2) பசு சதசத்து என அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?

3) மூவகை ஆன்மாக்களும் யாவை? அவை கொண்டுள்ள மலங்கள் யாவை?

4) ஆன்மாவின் இறுதி இலட்சியாது? அதற்கான உமது செயற்பாடுகள் யாவை?

(2+3+3+4=12 புள்ளிகள்)

07. ஆலயம் தொழுவது சாலவும் நன்று

1) நாம் ஏன் ஆலய வழிபாடு செய்தல் வேண்டும்.

2) பஞ்சாங்க நமஸ்காரமாவது யாது?

3) நீர் ஆலயத்திற்கு செல்லும் விசேடதினங்கள் ஆறு தருக.

4) ஆலயத்தில் நடைபெறும் ஆறுகாலப் பூசைகளும் யாவை?

(2+3+3+4=12 புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
**075 287 1457**